V

# காலாண்டு பொதுத்தேர்வு - 2019

## ஒன்பதாம் வகுப்பு

பதிவு எண் : | | | | | | |

நேரம்: 2.30 மணி

## சமூக அறிவியல்

மதிப்பெண்கள்: 100

### பகுதி - I

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 14 x 1 = 14

1. வேளாண்மை மற்றும் விலங்குகளைப் பழக்கப்படுத்துதல் தொடங்கிய காலக்கட்டம் ________.
a) பழைய கற்காலம் b) இடைக்கற்காலம் c) புதிய கற்காலம் d) பெருங்கற்காலம்

2. கூற்று : மெஸபடோமிய நாகரிகத்தின் அஸிரியர்கள் சிந்துவெளி நாகரிகத்தின் சமகாலத்தவர் ஆவர்.
காரணம் : அஸிரிய ஆட்சியாளரின் ஆவணம் ஒன்று மெலுஹாவிலிருந்து வந்த கப்பல்கள் பற்றி கூறுகின்றது.
a) கூற்றும் காரணமும் சரி; கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது.
b) கூற்றும் காரணமும் சரி; ஆனால் கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை
c) கூற்று சரி; காரணம் தவறு d) கூற்றும் காரணமும் தவறானவை

3. அலெக்ஸாண்டரின் இறப்பிற்குப் பின்னர் (323 கி.மு.) மிக விரைவாக வளர்ந்த பண்பாடு ________ என அழைக்கப்படுகிறது.
a) ஹெலனிஸ்டிக் நாகரிகம் b) சிந்துவெளி நாகரிகம் c) சீன நாகரிகம் d) எகிப்திய நாகரிகம்

4. நிலப்பிரபுத்துவம் ________ மையமாகக் கொண்டது.
a) அண்டியிருத்தலை b) அடிமைத்தனத்தை c) வேளாண் கொத்தடிமையை d) நிலத்தை

5. தக்காண சுல்தானியங்கள் ________ ஆல் கைப்பற்றப்பட்டன.
a) அலாவுதீன் கில்ஜி b) அலாவுதீன் பாமன் ஷா c) ஔரங்கசீப் d) மாலிக்காபூர்

6. பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன், இந்தியா ________ கண்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது.
a) கோண்டுவானா b) லொரேசியா c) பாந்தலாசா d) பாஞ்சியா

7. கூற்று I : ஆறுகள் சமன்படுத்துதலின் முக்கிய காரணியாகும்.
கூற்று II : ஆறுகள் ஓடும் சரிவுகளைப் பொறுத்து அதன் செயல்பாடு இருக்கும்.
a) வாக்கியம் I தவறு II சரி b) வாக்கியம் I மற்றும் II தவறு
c) வாக்கியம் I சரி வாக்கியம் II தவறு d) வாக்கியம் I மற்றும் II சரி

8. கடல் நீரோட்டங்கள் உருவாகக் காரணம் ________.
a) புவியின் சுழற்சி b) வெப்பநிலை வேறுபாடு c) உவர்ப்பிய வேறுபாடு d) மேற்கண்ட அனைத்தும்

9. மழைக்காடுகள் பல்லுயிர்த் தொகுதி அதிகளவு விவசாயத்திற்குப் பயன்படுத்த இயலாததற்குக் காரணம் ________
a) மிக அதிகப்படியான ஈரப்பதம் b) மிக அதிகமான வெப்பநிலை
c) மிக மெல்லிய மண்ணடுக்கு d) வளமற்ற மண்

10. 4 'மணி' மழைப்பொழிவு என ________ மழைப்பொழிவு என அழைக்கப்படுகிறது.
a) வளிமுக மழைப்பொழிவு b) வெப்பச் சலன மழைப்பொழிவு
c) புயல் மழைப்பொழிவு d) மலைத்தடுப்பு மழைப்பொழிவு

11. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.
a) இந்தியா b) அமெரிக்க ஐக்கிய நாடுகள் c) பிரான்ஸ் d) வாட்டிகன்

12. ________ ஐ.நா. சபை நாள் ஆகும்.
a) டிசம்பர், 10 b) ஜனவரி, 25 c) அக்டோபர், 24 d) ஜனவரி, 26

13. மனிதவள மேம்பாட்டு குறியீடு (HDI) கணக்கில் பின்வரும் எந்தப் பரிமாணத்தை எடுத்துக் கொள்ளவில்லை?
a) பாலினம் b) உடல்நலம் c) கல்வி d) வருமானம்

14. பணியிடத்தைக் கணக்கிடுவதற்கு ________ வயது வரையிலான வயதைக் கணக்கிடலாம்.
a) 12- 60 b) 15 - 60 c) 21 - 65 d) 5 - 14

### பகுதி - II

**II. எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி:** *(வினா எண். 28 கட்டாய வினா)* 10 x 2 = 20

15. ஹைரோகிளிபிக்ஸ், க்யூனிபார்ம் என்பதனை வரையறு.
16. கலிங்கா கல்வெட்டுக் குறிப்பு கூறுவது என்ன?
17. கான்ஸ்டன்டைனின் முக்கிய பங்களிப்பை சுட்டிக் காட்டுக.
18. விஜயநகர அரசை உருவாக்கியது யார்? அவ்வரசை ஆண்ட வம்சாவளிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
19. புவியின் நான்கு கோளங்களைப் பற்றி சுருக்கமாக எழுதுக.
20. வெப்பத் தலைகீழ் மாற்றம் - சிறுகுறிப்பு வரைக.
21. நீரியல் சுழற்சி என்றால் என்ன?
22. பல்வேறு வகையான நிலவாழ் பல்லுயிர்த் தொகுதிகளைக் குறிப்பிடுக.
23. நோட்டா (NOTA) பற்றி குறிப்பு எழுதுக.
24. அடிப்படை உரிமைகள் யாவை?
25. அனைத்து நாடுகளிலும் முதன்மை வளமாக மனித வளம் கருதப்படுவது ஏன்?
26. பொருளாதாரத்திலுள்ள மூன்று துறைகள் யாவை?
27. போக்சா (POCSO) - வரையறு.
28. கீழடுக்கை ஏன் வானிலையை உருவாக்கும் அடுக்கு என்று அழைக்கின்றோம்?

### பகுதி - III

**III. எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி:** *(வினா எண். 42 கட்டாய வினா)* 10 x 5 = 50

29. கோடிட்ட இடங்களை நிரப்புக:
i) மௌரியர் காலத்தில் ஆட்சிக்கலை மற்றும் பொருளாதாரம் குறித்து கௌடில்யர் எழுதிய நூல் ________ ஆகும்.
ii) கடல் தூண்கள் உருவாவதற்குக் காரணம் ________.
iii) கண்ணுக்குத் தெரியும் சுருங்கிய நீராவி காற்றில் மிதப்பதையே ________ என்கிறோம்.

iv) இந்தியாவில் _______ கட்சி முறை பின்பற்றப்படுகிறது.
v) இந்தியாவில் வேலைவாய்ப்பின் தன்மை _______.

30. பொருத்துக:

| | | |
|---|---|---|
| i) | சிறு அளவிலான கல்லால் ஆன செய்பொருள்கள் | - அரேபிய இரவுகளின் நகரம் |
| ii) | பாப்பிரஸ் | - சங்க காலத் துறைமகம் |
| iii) | அரிக்கமேடு | - அக்பரின் அரச சபை |
| iv) | பாக்தாத் | - பெருங்கற்காலம் |
| v) | தான்சேன் | - ஒரு வகைப் புல் |
| | | - நுண்கற்காலம் |
| | | - கோயில்களின் நகரம் |

31. பொருத்துக:

| | | |
|---|---|---|
| i) | கவசம் | - இலத்தீன் அமெரிக்கா |
| ii) | காளான் பாறை | - பசிபிக் பெருங்கடலின் ஆழமானப் பகுதி |
| iii) | வானிலையியல் | - ஏயோலியன் |
| iv) | ப்ரெய்ரி | - சிமா |
| v) | மரியானா அகழி | - வட அமெரிக்கா |
| | | - வானிலை பற்றிய படிப்பு |
| | | - காலநிலை பற்றிய படிப்பு |

32. a) வேறுபடுத்துக:
i) இயற்பியல் சிதைவு மற்றும் இரசாயனச் சிதைவு ii) உற்பத்தியாளர்கள் மற்றும் சிதைப்போர்கள்
b) காரணம் கூறுக : புவி மேலோடு கவசத்தின் மீது மிதக்கின்றது.
33. சங்க காலத்தில் தொழில்களும் கைவினைக் கலைகளும் எவ்வாறு பொருளாதாரத்தை மேம்படுத்தின?
34. சிலுவைப் போர் பற்றியும் அதன் தாக்கத்தைப் பற்றியும் விவரி.
35. வானிலை சிதைவு என்றால் என்ன? வகைப்படுத்துக.
36. வளிமண்டலத்தின் அமைப்பைப் பற்றி ஒரு பத்தியில் எழுதுக.
37. நேரடித் தேர்தலின் நிறைகள் மற்றும் குறைகளை விவாதி.
38. தேசிய மனித உரிமைகள் ஆணையம் நம் உரிமைகளை எவ்வாறு பாதுகாக்கிறது?
39. நிலையான மேம்பாட்டிற்கான கொள்கைகளைப் பற்றி விவரி.
40. இந்தியாவில் வேலைவாய்ப்பு அமைப்பைப் பற்றி விளக்குக.
41. பண்டைய தமிழகத்தின் பண்பாடுகள் பற்றிய காலக்கோடு வரைக.
42. **ஆசிய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.**
i) ஆசியாவின் வரலாற்றுக்கு முந்தைய கால இடத்தைக் குறிக்கவும்
ii) சீன நாகரிகத்தைக் குறிப்பிடவும் iii) செங்கடல்
iv) அரிக்கமேடு v) மொஹஞ்சதாரோ

## பகுதி - IV

**IV. இரு வினாக்களுக்கும் விடையளி:** 2 x 8 = 16

43. a) ஹோமினிட் மற்றும் ஹோமினின்ஸ்:
i) ஹோமினிட் என்போர் யாவர்?
ii) ஆப்பிரிக்காவில் கருவிகளை உருவாக்கிய முதல் மனித இனம் எது?
iii) நவீன கால மனிதர்கள் எந்தப் பெயரால் குறிக்கப்படுகிறார்கள்?
iv) இந்த இனத்தைச் சேர்ந்த ஏதேனும் ஒரு வகையைக் கூறுக.
b) நடு கற்கள்:
i) மேய்ச்சல் சமூகங்களுக்கிடையே காணப்பட்ட பொதுவான நடைமுறை என்ன?
ii) பகைவர்களின் கால்நடைச் செல்வத்தைக் கவர்ந்தவர்கள் யாவர்?
iii) இறந்த வீரர்களை மக்கள் எவ்வாறு நினைவு கூர்ந்தனர்?
iv) நடுகற்களை நிறுவுவதற்கான வழிமுறைகளை விளக்கும் தமிழ் நூல் எது? ***(அல்லது)***
c) ஜொராஸ்ட்ரியனிசம்:
i) இதைத் தோற்றுவித்தவர் யார்?
ii) அவர் 'ஒளியின் கடவுள்' என யாரைப் பிரகடனம் செய்தார்?
iii) ஜொராஸ்ட்ரியர் எதனைப் போதித்தார்? iv) வழிபாட்டின் உயர்ந்த வடிவம் எது?
d) ஐரோப்பியரின் வருகை:
i) இந்தியாவிலிருந்து நடைபெற்ற நறுமணப் பொருட்கள் வணிகத்தைக் கட்டுப்படுத்தியது யார்?
ii) அனைத்து பகுதியிலுமான கடல் வணிகத்தை போர்ச்சுக்கீசியர்களால் கட்டுப்படுத்த முடிந்தது. எவ்வாறு?
iii) இந்தியாவில் ஐரோப்பியரின் வணிக நடவடிக்கைகள் எவ்வாறு மேற்கொள்ளப்பட்டன?
iv) இந்தியாவில் டச்சுக்காரர், ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர், டேனியர் ஆகியோரின் இடங்கள் எவை?

44. **கொடுக்கப்பட்ட உலக வரைபடத்தில் பின்வருவனவற்றைக் குறிக்கவும்:**
i) ஏதேனும் ஒரு டெல்டாப் பகுதி ii) ஏதேனும் ஒரு குளிர் பாலைவனம்
iii) பசிபிக் நெருப்பு வளையம் iv) கிழக்கு ஆப்பிரிக்காவின் பிளவுப் பள்ளத்தாக்கு
v) மத்திய அட்லாண்டின் மலைத்தொடர் vi) ஏதேனும் ஒரு வெப்ப நீரோட்டம்
vii) ப்ரெய்ரிஸ் viii) வெப்பமண்டலக் காடுகள் பல்லுயிர்த் தொகுதி ***(அல்லது)***

**இந்திய வரைபடத்தில் கீழ்வருவனவற்றைக் குறிப்பிடவும்.**
i) இமயமலை ii) இந்தியாவின் வெப்பமண்டலக் காடுகள்
iii) இந்தியாவிலுள்ள பாலைவனம் iv) இந்தியப் பெருங்கடல்
v) இந்தியாவின் ஓத சக்தி மண்டலம் vi) இந்தியாவில் அதிக மழையைப் பெறும் இடம்
vii) இந்தியாவிலுள்ள சுண்ணாம்பு பிரதேச நிலத்தோற்றம் viii) தமிழ்நாட்டிலுள்ள தணிந்த எரிமலை

******